பக்கங்கள்: நான்கு

# வலம்புரி

விலை
ரூபா
5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2030 மார்கழி 15 வியாழக்கிழமை (30 - 12 - 1999) VALAMPURI ஒலி: 11

# சிவில்உடை ஆயுதபாணிகளால்

# இளம் அந்தணப் பெண் படுகொலை

## கடற்பரப்பில் ஏற்பட்ட விபத்தில் 9 கடற்புலிகள் உயிரிழந்தனர்

அண்மையில் கடற்பரப்பில் ஏற்பட்ட விபத்து ஒன்றின் போது 9 கடற்புலிகள உயிரிழந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த கடற்புலிகளின் விவரம் வருமாறு-

லெப். கேணல் அண்ணாச்சி அல்லது சிறி (காங்கேசமூர்த்தி கருணாநிதி) யாழ்ப்பாணம்

★ மேஜர் குகராஜ் அல்லது சிலம்பரசன் ஜோன் பீற்றர் தார்சியஸ்) யாழ்ப்பாணம்

★ கப்டன் கோபி அல்லது நவீனன் (கோபலராஜா ரமேஸ்கண்ணா) யாழ்ப்பாணம்

★ கப்டன் செந்தமிழ்நம்பி (ராசய்யா பிரபாகர) யாழ்ப்பாணம்

★ எழிலழகன் (சோமசுந்தரம் கமல்ராஜ்) திருமலை

★ சப்டன் குறுஞ்சிக்கண்

(4ஆம் பச்கம் பார்க்க)

## தம்பசிட்டி கப்பல்க்கம்பனிப் பகுதிகளில் குண்டு செயலிழக்க வைக்கப்பட்டது

தம்பசிட்டி கப்பல்கம்பனிப் பகுதியிலுள்ள பற்றைக்குள் குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்க வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுசிறது.

மேற்படிக் குண்டு இப்பகுதியில் இருப்பதாக மக்கள் இராணுவத்தினரிடம் தெரிவித்ததை அடுத்து, இராணுவத்தினர் பொதுமக்களை குண்டு உள்ள இடத்திலிருந்து 500 மீற்றர் தூரத்துக்கப்பால் செல்லுமாறு ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தல் வழங்கிய பின் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் குண்டு செயலிழக்கவைக்கப்பட்டது.

பாரிய சத்தத்துடன் வெடித்த குண்டு சேதம் எதனையும் ஏற்படுத்தவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

## தற்கொலைக் குண்டுத் தாக்குதல் 3000 பேர் வரை விசாரணை

கடந்த 18 ஆம் திகதி கொழும்பு மாநகரசபை மைதானத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து இதுவரை மூவாயிரம் பேர்வரை கொழும் குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் கொழும்பு மாநகரசபை ஊழியர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், தனியார் ஒப்பந்தகாரரொருவரின் சிற்றூழியர்கள் ஆகியோர் அடங்குவர்.

இதேவேளை அரசாங்க பகுப்பாய்வாளர் குழுவினர் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட இடத்தில் இருந்து எடுக்கப்பட்ட தடயப்பொருள்களை அடிப்படையாக வைத்தே புலன் விசாரணைகளை மேற்கொண்டிருப்பதாக குற்றத் தடுப்பு புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

## வெள்ளவத்தையில் இளைஞர் தற்கொலை

(கொழும்பு)

வெள்ளவத்தை றயில் நிலையத்துக்கு அருகில் நடமாடிய மட்டக்களப்பு இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப் பட்ட போது சயனைட் உண்டு மரணமானதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர் வெள்ளவத்தையில் உள்ள கணனிப்பயிற்சி நிலையமொன்றில் பயிற்சி நெறியினை மேற்கொள்வதற்காக இப் பகுதியில் அறை ஒன்றில் தங்கியிருந்தார் என்றும் இவரிடம் குறித்த நேரத்தில் வெடிக்கும் சக்திவாய்ந்த குண்டு மற்றும் அதற்கான கருவிகள் என்பன இருந்ததாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## புங்குடுதீவில் கோரச் சம்பவம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் இளம் அந்தணப் பெண் ஒருவரை இனம் தெரியாத சிவில் உடைதரித்த ஆயுத பாணிகள் நால்வர் கடத்திச்சென்று பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய பின் படுகொலை செய்த கோரச் சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் புங்குடுதீவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது புங்குடுதீவு 10ம் வட்டாரம் கண்ணகையம்மன் கோவிலடியில் வசித்துவந்த சந்திரசேகர சர்மாவின் வீட்டிற்கு நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் சென்ற இனம் தெரியாத சிவில் உடைதரித்த ஆயுதபாணிகள் நால்வர், அவ்வீட்டில் இருந்த இளம் பெண்ணின் சகோதரனை மூர்க்கத் தனமாகத் தாக்கி கட்டிப்போட்ட பின் தன்னந்தனியே நின்ற சாரதாம்பாள் (வயது 20) என்ற குடும்பப் பெண்ணை பலாத்காரமாகக் கடத்திச் சென்று பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய பின்னர் கொலை செய்து விட்டு ஆளரவமற்ற வெற்றுக்காணியில் சடலத்தைப் போட்டு காவோலையால் மூடிவிட்டு கொலைஞர்கள் தப்பிச்சென்று விட்டனர்.

மறுநாள் அதிகாலை அவரது சகோதரன் ஆறுமுக சர்மா அயலவர்களின் உதவியுடன் தனது சகோதரியை தேடிச் சென்ற போது எதிரே கூட்டமாக வந்த மாடுகள் ஆளரவம் கேட்டு சிதறி ஓடிய போது தற்செயலாக மாடுகளின் கால்களினால் இடறப்பட்ட காவோலைகளுக்குக் கீழ் சாரதாம்பாளின் சடலம் கிடப்பதைக் காண முடிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து உடனடியாக தீவுப்பகுதியில் உள்ள ஈழ மக்கள் ஜனநாயக கட்சிக் காரியாலயத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இச் செய்தி அறிந்த வேலணை பிரதேச சபைத் தலைவர் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று சடலத்தை நேரில் பார்வையிட்ட போது சடலத்தின் பல பாகங்களி

(4ஆம் பக்கம் பார்க்க]

## நீதிமன்றில் எட்டுப் பேர் ஆஜர்

(ஆணைப்பந்தி)

அனுராதபுரம் தடுப்பு முகாமில் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 5 பெண்கள் உள்ளிட்ட 22 பேரில் 2 பெண்கள் உட்பட 8 பேர் விசாரணைக்காக அனுராதபுரம் நீதி மன்றிற்கு அனுப்பப் பட்டுள்ளனர்.

இவ்வாறு அனுப்பப் பட்ட 8 பேரினதும் விபரம் வருமாறு:

எஸ். உதயலீலா, எஸ். கமலேஸ்வரன், பி. சீன்கொனரி பி. சந்திரகுமார் ஜி. சத்தியேந்திரா, ஜி. உசாநந் கே. பாலசுந்தரம், கே. லட்சுமிரஜ ஆகியோரரே இவ்வாறு விசரணைக்காக அனுராதபுரம் அனுப்பி வைக்கப்பட்டோராவர்.

## களுத்துறைக்கு மாற்றம்

(ஆனைப்பந்தி)

காங்கேசன் தடுப்பு முகாமில் இருந்து மேலதிக விசாரணைக்காக அனுராதபுரம் கொண்டு செல்லப்பட்ட டக்ளஸ் ஜெனா என்பவர் கடந்த 27ம் திகதி அன்று களுத்துறை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

(29)

## மக்கள் மத்தியில் பெரும் பீதி

புங்குடுதீவில் நேற்று முன்தினம் நடந்த இளம் பெண்ணின் படுகொலையைக் தொடர்ந்து தீவுப் பகுதியில் கடற்படையின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் மக்கள் மத்தியில் பெரும் பீதி நிலவுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## காட்டுமிராண்டித்தனமான செயல் ஈ. பி. டி. பி. கண்டனம்

புங்குடுதீவில் நேற்று இடம் பெற்ற இளம் பெண் படு கொலை தொடர்பாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

புங்குடுதீவுப் பகுதி முழுவதும் கடற்படையின் கட்டுப்பாடடிற்குள் இருக்கும் போது வேறு யார்மீதும் இக் காட்டுமிராண்டித்தனமான படு கொலையைச் சுமத்தி விட முடியாது என்று அக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வி.கே. ஜெகன் தெரிவித்தார்.

யாவராலும் வெறுக்கத் தக்க இக் கொடூரச் செயலைச் செய்தவர்களை இனங் கண்டு அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தக் கடற்படை தவறுமாயின் தாம் வெகுஜனப் போராட்டத்தை நடத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்

## கடற்படையினர் சிலர் இடமாற்றம்?

புங்குடுதீவில் நடந்த இளம் பெண்ணின் படு கொலைச் சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் உள்ள கடற்படை முகாமிலிருந்த கடற்படையினர் சிலரை சூட்டோடு சூடாக இடமாற்றம் செய்யப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மட்டக்களப்பில்

## இனந்தெரியாதோரின் துப்பாக்கிச்சூட்டிற்கு பொலீஸ் அதிகாரி உட்பட இருவர் பலி

(மட்டக்களப்புமாமங்கம் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி லியனகே (30), பொலீஸ் உத்தியோகத்தர் பியதாஸ (30) ஆகியோர் நேற்றுக் காலை 0.20 மணியளவில் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சீலா முனையிலுள்ள வீடியோ கடை ஒன்றுக்கு சென்றுகொண்டிருந்த போதே மேற்படி இருவரும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூடு இருவர் காயம்

(கொழும்பு)

கொழும்பு தேசிய ஆஸ்பத்திரிக்குள் இனந்தெரியாத குழுவொன்று புகுந்து சுட்டதில் இருநோயாளர்கள் காயம் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது,

துப்பாக்கி பிரயோகம் செய்த குழு தப்பி ஓடிவிட்டதாகம் தெரிவிக்கப்பட்டது

## கொட்டாஞ்சேனை சுற்றிவளைப்பு 8 தமிழ் இளைஞர்கள் கைது

(கொழும்பு(

கொட்டாஞ்சேனைப் பகுதி நேற்று சுற்றிவளைக்கப்பட்டு 8 தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சுற்றிவளைப்பு நேற்று காலை 4.30 மணியிலிருந்து 7 மணிவரை இடம்பெற்றது.

கொட்டாஞ்சேனையிலுள்ள கொட்டாஞ்சேனை வீதி, சென்லூசியஸ் வீதி, பொன்சன் வீதி ஆகிய பகுதிகளே சுற்றிவளைக்கப்பட்டு இளைஞர் இராணுவத்தினரால் அடையாள அட்டை, வதிவிடச் சான்றிதழ் என்பவை பரிசோதிக்கப் பட்டன.

கைது செய்யப்பட்ட 8 இளைஞர்களும் கொட்டாஞ்சேனை பொலீநிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## சின்னஞ் சிறு விளம்பரம்

தலை.

தமிழ் ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து பயிற்றுவிக்கக் கூடிய பெண் ஆசிரியர்தேவை நேரில் வரவும்,

சனி. ஞாயிறு காலை 9-.. மணி திருமகள் கல்வி நிலையம் கே.கே. எஸ். வீதி இணுவில் (00018)

## கலந்துரையாடல்

(தீவகம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ் மாவட்ட அலுவலகத்தில் 1999ம் ஆண்டு செயற்படுத்திய செயற் திட்டங்கள் சம்பந்தமாகவும், 2000-ம் ஆண்டு செயற்படுத்தவுள்ள திட்டங்கள் சம்பந்தமாகவும் பத்திரிகையாளர்களுக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் தேசிய வீடமைப்புக் காரியாலயத்திற்கு அருகாமையிலுள்ள தேசிய இளைஞர் மன்றத்தின் காரியாலயத்தில் நடைபெறவுள்ளதாக இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட உதவிப்பணிப்பாளர் சிவதெட்சணாமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## கமநல சேவை கிளை அமைப்பு

கரணவாய் பகுதி விவசாயிகளின் நன்மை கருதி கமநல சேவை திணைக்களகத்தால் சுமார் 5 இலட்சம் ரூபா செலவில் பருத்தித்துறை வீதியில் மூத்தவிநாயகர் ஆலயத்திற்கருகில் கமநல சேவை நிலையத்தின் கிளை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதன் திறப்பு விழா எதிர்வரும் புத்தாயிரமாம் ஆண்டு முதல் மாதத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது. இதனால் கரணவாய் மக்களிற்கு விவசாயப் பொருட்களைப் பெறுவதற்கு ஏற்பட்ட சிரமத்தை நீக்க உதவியாக இருக்கும்.

## வீதி திருத்தம்

(புலோலி)

வல்வெட்டித்துறை நகரசபைப் பகுதியில் உள்ள மானாங்கனை சமத்தரை வீதி 3 இலட்சம் ரூபா செலவில் திருத்தி புனரமைப்புச் செய்யப் படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை வல்வெட்டித்துறை நகர சபை மேற்கொண்டுள்ளது. (52)

# இரண்டு பெரிய கட்சிகளிடமிருந்தும் தமிழருக்கு ஆதரவு கிடையாது

**- பி. சந்திரசேகரன் எம். பி -**

இனப்பிரச்சினையினாலும் யுத்தத்தினாலும் ஏற்படுகின்ற தாக்கம் நாடு முழுவதற்கும் பொதுவான தாகிவிட்டது. எனவே இனப்பிரச்சினையைத் தீர்த்து போரை முடிவுக்குக் கொண்டு வரும் அரசியல் தேவையில் மலையக மக்கள் முன்னணிக்கும் பாரிய பங்கிருக்கின்றது'

இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான பி.சந்திரசேகரன் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில்தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்: மலையக மற்றும் வடக்கு-கிழக்கு அரசியல் கட்சிகளிடையே அரசியல் கூட்டு உருவாகி இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆனால் இதில் எதுவித உண்மையும் இல்லை.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலானது இனப்பிரச்சனை தீர்வு தொடர்பாக தற்போதைய அரசு பின்பற்றிவரும் நடைமுறைகளை தமிழ் மக்கள் நிராகரித்து விட்டார்கள் என்பதையே காட்டுகிறது.

தமிழ் மக்கள் பெருவாரியாக வாக்களித்த ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சி அமைக்க முடியாமல் போனதோடு பொதுசன ஐக்கிய முன்னணியே மீண்டும் ஆட்சிக்கு வந்துள்ளது.

இரண்டு கட்சிகளிடமிருந்தும் நம்பிக்கையோ, எதிர்பார்ப்பினையோ பெற்றுக் கொள்ள முடியாத நிலையே தமிழ் மக்கள் மத்தியில் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அடுத்த நூற்றாண்டின் முதல் சர்வசேத விருதினை பெறும் இலங்கை பிரமுகர்

(கொழும்பு)

இலங்கையின் பிரபல திரைப்பட பிரமுகரான லெஸ்ரஜேம்ஸ் பீரிசுக்கு புதுடில்லி சர்வதேச திரைப்பட விழாவில் அதிஉயர்ந்த விருது வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்திய அரசின் ஒத்துழைப்புடன் வரும் ஜனவரி 10 ஆம் திகதியில் இருந்து ஜனவரி 20 ஆம் திகதிவரை இடம்பெறும் மேற்படி விழாவில் பரிசுபெறுவதன் மூலம் அடுத்த நூற்றாண்டின் முதலாவது சர்வதேச திரைப்பட விருதை பெற்றுக்கொள்ளும். முதலாவது இலங்கையர் என்ற சிறப்பைப் பெற்றுக்கொள்ளும். திரு. லெஸ்ர ஜேம்ஸ் பீரிஸ், 1965 ஆம் ஆண்டில் புதுடில்லி திரைப்பட விழாவில் கம்பரிலி திரைப்படத்திற்கான விருதையும், 1997 ஆம் ஆண்டில் பிரான்ஸ் அரசு வழங்கிய திரைப்பட கலைஞர்களுக்கான அதி உயர் விருதினையும் பெற்றுக் கொண்டவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## துணை தலைவர் நியமனம்

(புதுடில்லி)

பாரதியஜனதாக் கட்சியின் துணைத் தலைவராக, டில்லியின் முன்னாள் முதலமைச்சர் திரு. மதன்லால் குரானா நியமிக்கப் பட்டுள்ளார்.

## அனைவரும் சித்தி

(மந்திகை)

அண்மையில் வெளியான க. பொ. த (உ/த) பரீட்சை முடிவுகளில் கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரியில் பரீட்சைக்கு தோற்றிய அனைவரும் சித்தியடைந்துள்ளனர்.

கலை, வர்த்தகம், ஆகிய இரு பரீட்சைக்கு தோற்றிய 17 பேரும் சித்தியடைந்தவர்களாகும் இதில் 12 பேர் பல்கலை கழக அனுமதி பெற தகுதி பெற்றுள்ளனர்.

## நிவாரணம் வழங்கல்

யாழ். பிரதேச செயலக எல்லைக்குள் இருந்து தற்போதைய சூழ் நிலையால் இடம் பெயர்ந்தோருக்கு இரு வார கால நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற் கொள்ளப் படுகின்றது. இதற்கான அனுமதியை வழங்கி அரச அதிபர் பிரதேச செயலகத்திற்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

## கொழும்பில் கோஷ்டி மோதல் ஒருவர் பலி! பலர் கடும்காயம்!

(கொழும்பு)

கொழும்பு கிராண்பாஸ் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11.00 மணியளவில் இரு கோஷ்டியினருக்கு இடையில் நடைபெற்ற மோதலில் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி மரணமானதாகவும் மேலும் இருவர் கத்திக்குத்துக் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாயும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நீர் கொழும்புப் பகுதியில் வீட்டில் இருந்தோர் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் காயமடைந்துள்ளனர்.

இவ்விரு சம்பவங்கள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## பொருளியல் பாடத்தில் 15 'ஏ' வேம்படி மகளிர் கல்லூரி சாதனை

அண்மையில் வெளியான க. பொ. த. உயர்தரப் பரீட்சை முடிவுகளில் வேம்படி மகளிர் கல்லூரியில் கலை, வர்த்தகப் பிரிவைச் சேர்ந்த பதினைந்து மாணவிகள் பொருளியல்பாடத்தில் ''ஏ'' சித்தி பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இது குறித்து இக் கல்லூரியின் பொருளியல் பாட ஆசிரியை செல்வி புண்ணியமூர்த்தியை பெற்றோர்கள் பாராட்டியுள்ளனர்.

அண்மைக்காலத்தில் பொருளியல் பாடத்தின் பெறுபேறுகளில் அகில இலங்கை ரீதியில் வீழ்ச்சி நிலைகாணப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

## இராசி பலன்

30,12.1999 வியாழக்கிழமை (தமிழுக்கு மார்கழி 15)

அட்டமி பிற்பகல் 1. 49 வரை: அத்தம் இரவு 7.40 வரை: சித்த யோகம் அட்டமி நவமி, இராகு காலம் பகல் 2.29 முதல் 3,59 வரை சுப நேரம் காலை8.29 முதல் 9.59 வரை.

மேடம்-விருந்துபசாரம், மனமகிழ்ச்சி, வேற்றுமை நீங்குதல்.

இடபம்- தெய்வீகச் செலவு, மனப்போராட்டம், மறதி.

மிதுனம்- தொழில் மந்தம், வைத்தியச்செலவு, சோம்பல்.

கடகம்- வினோத சிந்தனை, நண்பர் கலகலப்பு,செலவு.

சிங்கம்-உறவினர் தொல்லை, பணத்தகராறு,அலைச்சல்.

கன்னி- சுப காரியச் செலவு, தொழில் மேன்மை, பணியாளர் உதவி,

துலாம்-துயரச் செய்தி, நண்பர் விரோதம்,மனச்சுமை.

விருச்சிகம்- எதிர் பாராத லாபம், விரோதம், புத்திரர் பெருமை,

தனுசு- அற்பர் நேசம்,மகிழ்ச்சியான சூழல், பெண் கருணை.

மகரம்- பிதாவழிச்செலவு, பயணத் தொல்லை,ஏமாற்றம்,

கும்பம்- நேய வார்த்தை, ஆதரவின்மை, வாக்குப் பகை.

மீனம்- கல்வியால் சிறப்பு, அநாவசியச் செலவு, மாமனார் பிரிவு.

(இலங்கைநேரப்படி கணிக்கப்பட்டது)

-அனுஷியா

## அம்பாள் ஆலயத்திற்கு நிதியுதவி

சித்தன்கேணி, கீரிமலை வீதியில் அமைந்துள்ள பழமையும் புதுமையும் வாய்ந்த ஸ்ரீ நாக கன்னி அம்பாள் ஆலயத்திற்கு மின்சாரம் வழங்கு முகமாக வலிகாமம் மேற்கு பிரதேச சபை தலைவரும் வட்டுக்கோட்டை தொகுதியின் ஈ. பி. டி. பி அமைப்பாளருமான ந. திரிலோகநாதன் 15 ஆயிரம் ரூபாவை வழங்க முன்வந்துள்ளார்.

இது தொடர்பாக மேற்படி ஆலய நிர்வாகத்தினர் இவரை சந்தித்து இவ் ஆலயத்திற்கு மின்சாரம் வழங்குவதன் அவசியம் குறித்து கலந்துரையாடியதைத் தொடர்ந்தே மேற்படி நிதியை வழங்க இவர் முன்வந்துள்ளார்.


பருத்தித்துறை பிரதேசசபை புலோலி

**2000 ஆம் ஆண்டிற்கான மீள்கேள்வி அறிவித்தல்-2000**

( பொதுச் சந்தை இறைச்சிக் கடை )

கேள்விப்பத்திரங்கள் பருத்தித்துறை பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் 03 - 01 - 2000 ஆண்டு பி. ப 3. 30 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். 04 - 01 - 2000 ஆண்டு பி. ப 12.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அன்று பி.ப 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| குத்தகை விபரம் | ஆகக்குறைந்த தொகை | கேள்வி வைப்பு | படிவம் |
|---|---|---|---|
| மந்திகை மாட்டிறைச்சிக்கடை | 153100.00 | 3000.00 | 150.00 |
| கெருடாவில் சந்தை | 750,00 | 500.00 | 150.00 |

ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் ஜே. பி. யு. எம்

தலைவர்

பருத்தித்துறை பிரதேச சபை

பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி.

(00019)


## கணனிப் பிரச்சனையை சமாளிப்பதற்கு ரயில்வே திணைக்களம் தயராக உள்ளது

(கொழும்பு)

அடுத்த வருடத்தின் போது ஏற்படவிருக்கும் கணனிப் பிரச்சனையைச் சமாளிப்பதற்கு ரயில்வே திணைக்களம் தயாராக இருக்கிறது என்று ரயில்வே பொது முகாமையாளர் டபிள்யூ. ஏ. கே. வேரகம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அடுத்த வருடத்தில் புதிய ரயில் எஞ்சின்களும் பெட்டிகளும் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று கூறிய அவர் ரயில் சேவையின் கடந்தகால,நிகழ்கால,வருங்கால திட்டங்கள் என்பவற்றை பிரதிபலிக்கும் வகையில் கோட்டை ரயில்வே நிலையப் பகுதியில் ஜனவரி 10 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதிவரை கண்காட்சி ஒன்று நடைபெறும் என்றும் தெரிவித்துள்ளார். (சு-14)

## ஜி. ரி. சற் உதவியுடன் மல சல கூட வசதி

ஜி. ரி. சற் நிறுவனத்தின் நிதி உதவியுடன் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவிரோதய மகா வித்தியாலயத்திற்கு நவீன வசதிகளுடன் கூடிய மல, சல கூடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான திட்டமிடல்கள் விரைவில் ஆரம்பமாக உள்ளதாக மகா வித்தியாலய அதிபர் புலவர் மு. பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

## முற்றவெளிப் பகுதியில் துப்பரவுப் பணி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டை முனியப்பர் ஆலைய சுற்றாடலும், 1974-ம் ஆண்டு நடைபெற்ற தமிழராய்ச்சி மகாநாட்டில் தம் இன்னுயிரை ஈர்ந்த தமிழ் மக்களின் நினைவுத் தூபிகள் அமைக்கப்பட்ட சுற்றாடலும் துப்பரவு செய்யப்பட்டு வருகிறது. இப் பணியில் யாழ் மாநகரசபைத் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.
- குறள்

வலம்புரி

## புத்திலக்கியம் படைப்போம்

புத்தாயிரமாம் ஆண்டை எதிர்கொள்ளத் தலைப்படும் எம்மவர்க்கு இதயத்தில் பல எண்ணங்கள் அபிலாஷைகள் உதிப்பது இயல்பே. நாட்டின் முதுகெலும்பாக பளிங்கு போல் இலயக்கியப் பணி செய்வார்கள் எழுத்தாளர்கள். அவர்களது பணி சான்றாண்மைப் பெருமக்களை உற்பவிக்கும் சமூகத்தை திருந்திய நெறியிற் செல்ல வழி வகுக்கும். புலமைப்புலம் புலர புதுப்பாதை திறக்கும். பண்பாட்டு விழுமியங்களைத் தழுவ தக்க உணவு கிடைக்கும்.

எங்கள் மண்ணில் இலக்கியப் பணி செய்யும் பல்லோரும் விழிப்படைய வேண்டிய விடயமொன்று உண்டு. காலத்தின் தேவையை உணர்தல். மண்ணின் அவலங்களைப் புரிதல், மண்வாசனையை நுகர்தல் எனப்பட்டியல் நீளும். அப்போது தான் அவர்களின் பணி சிறக்கும்; நிறைவுபெறும்.

உயிர்த்துடிப்போடு எழுதிக்கொண்டிருக்கும் எழுத்தாளர்களை உற்பவித்த பிதாமகர்களை எண்ணிப்பார்க்கின்ற போது சற்று ஆறுதல் கிடைக்கிறது. விருதுகளுக்கு புதியவர்கள் அல்லாத செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், அராலி சுந்தரம்பிள்ளை, சொக்கன், வரதர், சிற்பி சு. வே, தெணியான், ஜீவா, முருகானந்தம் எனப் பட்டியல் தொடரும். காரை சுந்தரம்பிள்ளை, சோ. பா, நீலாவணன், தில்லைத்துமிலன், சிவசேகரம், மகாகவி, சில்லையூர் பண்டிதர் சச்சி எனக் கவிமழை பொழியும் கார்மேகங்களை மறக்க முடியாது தான். இவர்களது பணி மண்ணின் அவலங்களைத் துலாம்பரப்படுத்துவதாய், தெம்பூட்டுவதாய் இதய நாதம் எழுப்ப வேண்டும். இளைய தலைமுறைகள் அருளானந்தம், அரவிந்தன் என பலர் கிளர்ந்தெழ வேண்டும்.

நிறைவாக செங்கையாழியான் இதயம் வேண்டி நிற்கும் எதிர்பார்ப்புக்களைப் பார்ப்போம். அமைதி, ஆனந்தம், இன்பம், சமாதான நிம்மதி சூழ்ந்து பொலியும் சுதந்திரவிடியல் என்பவற்றையே அவாவுகிறார். நல்லதோர் எண்ணம். அவரது பிரதிக்ஞை எண்ணத்தை விஞ்சி நிற்கிறதே. புத்திலக்கியம் படைப்போம் என்ற அறைகூவலே அது.

- அன்புடன்ஆசிரியர்

## நாவலர்வீதியில் லொறி - சைக்கிள் விபத்து

நாவலர் வீதி புகையிரதப் பாதைக்கருகில் உள்ள இராணுவக் காவலரனுக்கு முன்பாக நேற்று இரவு 7மணியளவில் லொறியும் சைக்கிளும் மோதிக்கொண்டதில் சைக்கிளில் வந்தவருக்கு தலையில் காயமேற்பட்டது.

காயமடைந்தவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## 5 வள்ளங்கள் கடலில் மூழ்கின

(திருகோணமலை)

திருகோணமலையில் மீனவர்களை ஏற்றிச்சென்ற 5 வள்ளங்கள் கடலில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வள்ளங்கள் கடுமையான கடல் கொந்தளிப்பு காரணமாக மூழ்கியுள்ளன என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படைச் சுழியோடிகளினால் ஒருவருடைய சடலத்தை மட்டுமே மீட்க முடிந்தது. என்றும் கடலில் மூழ்கியோரைத் தேடும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது.

# மட்டு.மாவட்ட வெள்ள அனர்த்தத்தில் 25,389 குடும்பங்கள் பாதிப்பு

### மட்டு. அரச அதிபர் தகவல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலேற்பட்ட பெரு வெள்ளத்தினால் வீடு, வாசல்களை இழந்தோரின் விபரங்கள் திரட்டப்பட்டுள்ளதாகவும் மாவட்டத்தின் 7 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 25,389 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஏ. கே. பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் 31 இலட்சம் ரூபாவை சமூக சேவைகள் திணைக்களம் மேற்படி இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணமாக வழங்க ஒதுக்கீடு செய்துள்ளது.

நேற்று புதன் கிழமை முதல் இவ் அகதிகளுக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களூடாக நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது.

ஓட்டமாவடி, வாழைச்சேனை மண்முனை வடக்கு, வாகரை, ஆரையம்பதி, காத்தான்குடி, செங்கலடி ஆகிய பகுதிகளிலேயே பெரும் தொகையானோர் வீடுவாசல்களை இழந்துள்ளனர்,

## புறநிலைப்படிப்புகள்

## தென்மராட்சிப் பிராந்திய நிலையத்தில் 662 பேர் சான்றிதழ்கள் பெற்றனர்

(சாவகச்சேரி)

யாழ்.பல்கலைக் கழக புறநிலைப்படிப்புக்கள் அலகின் தென்மராட்சிப் பிராந்திய நிலையத்தில் நடைபெற்ற பயிற்சி நெறிகளில் 662 பேர் பங்கு கொண்டு சான்றிதழ்களைப் பெற்றுள்ளனர்.

தொடர்பாடலுக்கான ஆங்கிலக் கற்கை நெறியில் ஏழு அணிகளில் 239 பேரும், ஆங்கில உயர் தரக் கற்கை நெறியில்[தொழில் புரிவோர்க்கான] 40 பேரும், அலுவலக முகாமைத்துவ கற்கை நெறியில் 5 அணிகளில்195 பேரும், நில அளவையியலும் படவரைபுக்கலையும் கற்கை நெறியில் 2 அணிகளில் 76 பேரும், கல்வி மேம்பாட்டுக் கற்கை நெறியில்3 அணிகளில் 112 பேருமாக கற்கைநெறிகளை பூர்த்தி செய்து இவர்கள் சான்றிதழ்களைப் பெற்றுள்ளனர்.

மேற்படி கற்கை நெறிகளை பயில விரும்புவோர் ஆரம்பமாகவிருக்கும் புதிய அணிகளில் சனி., ஞாயிறு, புதன் கிழமைகளில் அலுவலக நேரத்தில் மேற்கொள்ள முடியுமென தென் மராட்சி பிராந்திய இயக்குனர் ஜே.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

## பாவனைக்கு உதவாத பிஸ்கட் அழிப்பு

(கரணவாய்)

கப்பூது பகுதிகளில் கடைகள் மீது மேற்கொள்ளப்பட்ட திடீர் வேட்டையின் போது பாவனைக்கு உதவாத பிஸ்கட் மற்றும் பால்மா வகைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

இதனையடுத்து அந்த பிஸ்கட் வகைகள் அழிக்கப்பட்டது. (க-27)

## தென்னம் கன்றுகள் விநியோகம்

(மந்திகை)

பருத்தித்துறை பிரதேச சபையினர் சக்கோட்டை சுவேரியார் சனசமூக நிலையத்திற்கு தென்னங்கன்றுகளை வழங்கியுள்ளனர்.

இத் தென்னங் கன்றுகள் விநியோக மூலம் 35 இற்கு மேற்பட்ட குடும்பத்தினர் நன்மையடையவுள்ளனர். (க-23)

## தீவகத்தில் தலைமைத்துவப் பயிற்சி இளைஞர் சேவைகள் மன்றம் ஏற்பாடு

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் இளைஞர் தலைமைத்துவப் பயிற்சி வகுப்பு நடைபெறவுள்ளது.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் ஏற்பாடாகியுள்ள இத் தலைமைத்துவப் பயிற்சி நிகழ்வில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரதம விருந்தினராகவும், தேசிய இளைஞர்கள் மன்ற யாழ். மாவட்ட உதவி இயக்குநர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்,

ஊர்காவற்றுறை,வேலணை யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த சுமார் 50 இளைஞர் யுவதிகள் கலந்து கொள்ளும் இப் பயிற்சி வகுப்பில் யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் கருத்துரை வழங்குவர்.

# பிரான்ஸ்,ஸ்பெயினில்கடும்சூறாவளி 50 பேர் பலி! பெருமளவினர் காயம்

### மீட்பு பணிகள் தொடர்கின்றன

(பிரான்ஸ்)

பிரான்ஸிலும், ஸ்பெயினிலும் ஏற்பட்டுள்ள கடுமையான சூறாவளி அனர்த்தம் காரணமாக 50 பேர் வரை பலியாகியுள்ளதாகவும் நூற்றுக்கும் மேற்பட்டோர் காயங்களிற்கு உள்ளாகியிருப்பதாயும் அங்கு மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மணிக்கு 200 கிலோ மீற்றர் என்ற வேகத்தில் வீசிய கடுமையான புயல் காற்றினால் சுமார் 35 இலட்சம் வீடுகளுக்கான மின் இணைப்புக்கள் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது.

பிரான்சின் மேற்குப் பகுதி பாரிஸ் நகர், ஸ்பெயின் பகுதிகளில் பலத்த மழையுடன் கூடிய சூறைக் காற்றினால் பாரிஸில் உள்ள உலகப் புகழ் பெற்ற தேவாலயம் ஒன்று பாரிய அழிவுகளுக்கு உள்ளாகியுள்ளது.

பாரிஸ் நகருக்கு வெளியே உள்ள 14 ஆம் லூயி மன்னரின் அரண்மனை பகுதியில் 10000 இற்கும் மேற்பட்ட மரங்கள் வேரோடு சாய்க்கப்பட்டுள்ளன.

புயல் காற்றின் பாதிப்பை அடுத்து ரயில் மற்றும் வாகனப் போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் பணிகள் தொடர்ந்து மேற் [illegible] து.

## பாகிஸ்தானில்

## இறுதி ஊர்வலத்தில் துப்பாக்கி பிரயோகம் 6 பேர் கோரப் பலி! பலர் காயம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் இஸ்லாமிய தீவிர வாதிகள் எனச் சந்தேகிக்கப்படுவோர் அண்மையில் மேற்கொண்ட கண் மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் 13 பேர் பலியாகியுள்ளனர். 6பேர் காயமடைந்துள்ளனர்,

பாகிஸ்தானின் வடமேற்கு மாகாணத்தில் உள்ள சிங்கந்தைப்பூர் என்னும் கிராமத்திலேயே மரணச்சடங்கு இறுதி ஊர்வலத்திலே இப் படுகொலைச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இத்தகைய கண்மூடித்தனமான தாக்குதல்கள் மேற்கொள்வதனை அனுமதிக்கக் கூடாது என பாகிஸ்தானிய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## நானூறு ஆண்டுகளாக

## போர்த்துக்கேயரின் ஆளுகைக்குட்பட்ட 'மக்காவ்'தீவு சீனாவிடம் கையளிப்பு

கடந்த நானூறு ஆண்டுகளாக போர்த்துக் கேயரின் ஆட்சியின் கீழ் செயற்பட்டு வந்த மக்காவ் தீவு சில தினங்களுக்கு முன்னர் சீனாவின் கைக்கு மாறியுள்ளது.

இத்தீவின் அரச கட்டடங்களில் இதுவரை பறந்து கொண்டிருந்த போர்த்துக்கேய கொடி இறக்கப்பட்டு சீனக் கொடி ஏற்றப்பட்ட வரலாற்று நிகழ்வானது அண்மையில் அரங்கேறியுள்ளது.

வரலாற்று சிறப்பு பெற்ற இந்நிகழ்வில் போர்த்துக்கேய அதிபர் ஜார் சோப்பிரியஸ் உட்பட பல முக்கியஸ்தர்கள் பங்கு பற்றினர்.

## ஜம்மு காஷ்மீர் மோதலில் 5 பேர் பலி

(புதுடில்லி)

ஜம்மு காஷ்மீரில் ஸ்ரீநகர் பகுதியில் சிறப்பு நடவடிக்கை வளாகத்தில் தீவிரவாதிகளுக்கும் காவல் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சமரில் ஓர் உயர் பொலிஸ் அதிகாரி உட்பட 5 பேர் பலியாகியும் 10 அதிகாரிகள் காயமடைந்தும் உள்ளனர்.

## வெனிசுவெலா 25 பேர் பலி!

[மெக்சிக்கோ]

வெனிசுவெலாவில் ஜெட் விமானம் ஒன்று வீழ்ந்து நொருங்கியதில் 25 பேர் கொல்லப்பட்டனர், பலர் காயம் அடைந்துள்ளனர்.

ரஷ்யத் தயாரிப்பான மேற்படி விமானம் வெனிசுவெலாவின் வலன்சியாவுக்கு அருகாமையில் உள்ள மலை ஒன்றுடன் மோதியதில் ஏற்பட்ட விபத்தில் அதில்சென்ற அனைவரும் கொல்லப்பட்டனர்-

## முடிவின்றி தொடரும் இந்தியன் ஏயார் லைன்ஸ் கடத்தல் நாடகம்

(காபூல்)

இந்தியன் எயார் லைன்ஸ் விமானக் கடத்தல் காரர்கள் விடுத்த கோரிக்கைக்கு இந்திய அரச தரப்பில் பதில் அனுப்பப் பட்டிருப்பதாகவும் இது தொடர்பாக கடத்தல் காரர்களிடமிருந்துஇது வரையில் சாதகமான பதில் எதுவும் வரவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இக் கோரிக்கைகள்சம்பந்தமாக கடத்தல் காரர்கள் தெரிவிக்கையில்: தமது தரப்பைச் சேர்ந்த 35 பேர் விடுதலை செய்யப்படவேண்டும் என்றும் கடந்தஆண்டுசிறைக் கலவரத்தின் போது கொல்லப்பட்ட தமது சகாவான சஜித் ஆப்சானியின் உட... திருப்பித்தரப்பட வேண்... என்றும் தெரிவித்துள்ளன...

மேலும் 20 கோடிடொ... பிணைப்பணம் தர... வேண்டும் எனவும் கடத்தல் காரர்கள்தெரிவித்துள்ளன...

# தேர்தல் மோசடிகளில் எம்.பிக்கள் ஈடுபட்டிருந்தால் கடும் நடவடிக்கை

(கொழும்பு)

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பின் போது மோசடிகளில் ஈடுபட்டதாகக் கருதப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் வாதிகளுக்கும் எதிரான குற்றச் சாட்டுகள் நிரூபிக்கப்படுமிடத்து அவர்களுக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐ.தே.க, பொ.ஐ.ஐ.மு. கட்சிகள் தீர்மானித்திருப்பதாக தெரிவித்துள்ளன.

ஜனாபதித் தேர்தல் தினமான வாக்களிப்பு தினத்தன்று சுமார் 500 தேர்தல் முறைகேடுகள் நடைபெற்றிருப்பது தொடர்பாக வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்களிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக தேர்தல் திணைக்கள உயர் வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்முறைப்பாடுகளில் சுமார் ஐ.தே. கட்சிமேற்றும் பொ.ஐ.ஐ. முன்னணி எம்பிக்களுக்கு எதிரானவையாக இருப்பதாகவும் தேர்தல் ஆணையாளர் வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்முறைப்பாடுள் அடுத்த வாரமளவில் தரம் பிரிக்கப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும் விசாரணைகள் தேர்தல் திணைக்கள மட்டத்திலும் பொலீஸ் மட்டத்திலும் நடைபெறும் என்றும் பொலீஸ் விசாரணைகள் அறிக்கைமூலம் பொலீஸ்மா அதிபரிடம் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்படும் எனவும் தெரிவிற்கப்படுகிறது

## இராணுவ கட்டமைப்பில் மாற்றங்கள் இராணுவபேச்சாளர் பாலித பெர்னான்டோ

(கொழும்பு)

இராணுவப் பேச்சாள பிரிகேடியர் சுசில்தென்னக்கோன் ஜனவரி மாதம் 1 ஆம் திகதி முதல் அனுராதபுரம் 21 வது படையணித்தளபதியாக நியமனம் பெற்று இடமாற்றம் பெற்று செல்கிறார்.

சுசில்தென்னக்கோனின் இடத்திற்கு புதிய இராணுவப் பேச்சாளராக கொழும்பு இராணுவ தலைமையக திட்டமிடல் பணிப்பாளராக இருக்கும் பாலிதபெர்னாண்டோ நியமனம் பெற்றுள்ளார்.

அனுராதபுரம் 21 ஆவது படையணித் தளபதியாக இருந்த சாந்தா கொட்டகொட இந்தியாவில் உள்ள இராணுவ தேசிய பயிற்சிப் பாடசாலைகளில்ஒரு வருடம் பயிற்சிபெறச் செல்வதால் சுசில்தென்னக்கோன் அங்கு இடமாற்றம் பெற்றுச் செல்கிறார்.

இராணுவத் தளபதி ஸ்ரீலால் வீரசூரியாவின் அந்தரங்கச் செயலாளராக யேமன்சேனவீர நியமனம் பெற்றுள்ளார்.

## மாதாந்த உதவிப்பணம் அதிகரிப்பு 3லட்சத்து50ஆயிரம் குடும்பங்கள் நன்மை

(கொழும்பு)

சமூகசேவைகள் அமைச்சினால் வறியகுடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் 100ரூபா உதவிப் பணத்தை 300ரூபாவாக அதிகரிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

இவ்வதிகரிப்பு தொடர்பான ஆலோசனை அறிக்கை தற்போது தயாரிக்கப் பட்டுள்ளது. இவ்வறிக்கையை அமைச்சரவை அங்கீகரித்த பின் புத்தாயிரமாம் ஆண்டு ஜனவரிமாதம் முதல் இவ்வதிகரிக்கப்பட்ட இவ்வுதவிப் பணத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சமூகசேவைகள் அமைச்சர் சுமேதாஜசேன அறிவித்துள்ளார்.

இவ்வதிகரிப்பின் மூலம் குறைந்த அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் 100ரூபா உதவி பணத்தை 300ரூபாவாகவும், 4பேர்களுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களை கொண்ட குடும்பங்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் 300ரூபா 500ரூபாவாக அதிகரிக்கப் படவுள்ளது.

இவ்வுதவித் கொகை அதிகரிப்பினால் மூன்றுலட்சத்து ஐம்பதினாயிரம் குடும்பங்கள் நன்மை அடையவுள்ளன.


## உடன் தேவை

வலம்புரி பத்திரிகைக்கு பின்வரும் பதவிகளில் முன் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

★ அலுவலக செய்தியாளர்
[ ஆண், பெண் ]
வயது;- 25க்கும் 40க்கும் இடைப்பட்டவர்கள்

★ ஒப்பு நோக்குனர்
[ ஆண்கள் மட்டும் ]

★ அச்சுக் கோப்பாளர்கள்
[ ஆண், பெண் ]

அனுபவத்தகமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களுடன் நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

ஆளணி முகாமையாளர்
வலம்புரி பணிமனை
இல - 15 வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 1999-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## நாளை நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

கலாநிதி அருணாசலம் சிவபாதசுந்தரம்நினைவுபேருரை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நாளை வெள்ளிக்கிழமை பி. பகல் 3. மணிக்குநடைபெறவுள்ளது,

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் அன்ராது நினைவுப் பேருரையை நிகழ்த்தவுள்ளார்.

## இடமாற்றம் இரத்து

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை ஊழியர்கள் 11 பேருக்கு வடக்கு கிழக்குமாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் அனுப்பி வைக்கப்பட்டிருந்த இடமாற்ற உத்தரவுக் கடிதங்களை ஆணையாளர் இரத்துச் செய்து சம்மந்தப்பட்ட ஊழியர்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

## ஸ்ரீதரன் வவுனியா மாற்றம்

தேசிய மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரியாக கடமையாற்றிய திரு. சண்முகநாதன் ஸ்ரீதரன் வவுனியா மாவட்ட இணைப் பதிகாரியாக புத்தாயிரமாம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தற்போது வவுனியா மாவட்ட இணைப்பதிகாரியாக திரு. வெசும் பெருமவே தற்காலிகமாகக் கடமையாற்றி வருகிறார்.

## விண்ணப்பங்கள் கோரியுள்ளனர்

கல்விமாணி பட்டப்படிப்பிற்கான விண்ணப்பங்கள் கேரப்பட்டுள்ளன.

தமிழ்மொழிமூலம் ஆரம்பப்பிரிவுக்கு மாத்திரமே கோரப்பட்டுள்ள இப்பயிற்சி நெறிக்கு ஆசிரியப் பயிற்சியின் பின் மூன்று வருட சேவையைப் பூர்த்தி செய்தோரே விண்ணப்பிக்க தகுதி பெறுவர்.

இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர் வரும் 31 ஆம் திகதிக்கு முன் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம், மகரகம என்ற விலசத்திற்கு மகரகம தபால் நிலையத்தில் மாற்றத்தக்கதாக நூறு ரூபா காசுக் கட்டளையையும் சுய விலாசமிடப்பட்ட கடித உறையையும் அனுப்பி விண்ணப்பபத்திரத்தை பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொண்டர் ஆசிரியர் விசேட கூட்டம்

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை காலை 10மணிக்கு யாழ்ப்பாணம் டி. எம். ஐ. கல்வி நிலையத்தில் நடைபெறும் இதில் அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

## வன்னிப்பகுதியில் பணத்துக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது

வன்னிப்பிரதேசத்தில் உள்ள வங்கிகளில் பணத்துக்குப் பெரும்தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணத்துக்கு நிலவும்தட்டுப்பாடு காரணமாக அங்கு ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஒரு கிழமைக்கு 500 ரூபா வீதமும், வாடிக்கையாளர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பணம் வழங்கப்பட்டுவருவதாகவும் முல்லைத்தீவு அரச அதிபர் திரு. எஸ். சுந்தரம் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சு அனுமதிவழங்காததினாலேயே வங்கிகளில் பணத்துக்கு முடக்கம் ஏற்பட்டுளது.

ஆரம்பத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்15லட்ச ரூபா மட்டுமே கொண்டு செல்ல அனுமதி வழங்கப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## முல்லைத்தீவில் உணவுப் பொருட்கள் தட்டுப்பாடு அரிசி ஒருகிலோ 70 ரூபா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பிரதேசத்தில் உணவுப்பொருட்களுக்கு முக்கியமாக அரிசிக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுவதாகவும் ஒருகிலோ அரிசி 70 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாகவும் அதுவும் ½ கிலோ அரிசியே வழங்கப் படுவதாகவும் முல்லைத்தீவு அரச அதிபர் திரு. எஸ். சுந்தரம் தெரிவித்தார்.

அரச அதிபர் இது தொடர்பாக மேலும் தகவல் தருகையில் முல்லைத்தீவு மக்களுக்கு ஒரு மாதத்திற்கு 252 லொறி உணவுப் பொருள் தேவையாக இருப்பதாகவும் ஆனால் வன்னிப் பிரதேசங்களுக்கு முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி முழுமையாக 240 லொறி உணவுப் பொருளே அனுப்பிவைக்கப் படுவதாகவும், இதனால் தான் தட்டுப்பாடு நிலவுகிறது என்றும் தெரிவித்தார்.

நிவாரணம் வழங்குவதற்கு மட்டும் 107 லொறிகள் உணவுப் பொருள் தேவைப் படுவதாகவும் அவர்தெரிவித்தார்,

அரிசி கொள்வனவு செய்வதற்கு புனர்வாழ்வுப் பகுதியினர்சுமார்12மில்லியன்ரூபாவை தன்னிடம் வழங்கிகியிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு 406 மாணவர்கள் அனுமதி

(மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு நானூற்றாறு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப் பட இருக்கிறார்கள். இம் மாணவர்களை பகிடி வதை இல்லாமல் சிநேகித பூர்வமாக வரவேற்க மாணவர் சங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இவ்வாறாகச் சேர்க்க இருப்பவர்களில் விஞ்ஞான பீடத்திற்கு நூற்றிருபத்தைந்து, கலைப்பீடத்திற்கு நூற்றெண்பத்தேழு, விவசாய பீடத்திற்கு இருபத்தாறு, வர்த்தக பீடத்திற்கு முப்பது, முகாமைத்துவ பாடநெறிக்கு முப்பத்தெட்டு மாணவர்களையும் சேர்க்க இருக்கிறது.

## மின்சாரம் வினியோகம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தில் இருந்து காங்கேசன் துறை வீதிவழியாக யாழ்ப்பாணம் வரை வழங்கப்பட்டு வரும் மின்சாரம் காலை முதல் மதியவரை வழங்கப்படும்.

சுன்னாகம் பருத்தித்துறை வீதி வழியாக நீர்வேலி, கோப்பாய், இருபாலை, கல்வின்காடு, நல்லூர், நாயன்மார்கட்டு, அரியாலை, வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளுக்கு மின் விநியோகம் நடைமெறுகிறது.

மதியம் 12.30 மணிக்குப் பிறகே வடமராசிம் பகுதிக்கு மின் வழங்கப்படும். கிறது

யாழ் நகரப் பகுதிபைப் பொறுத்தமட்டில் மின்சாரம் முழுமையாக பகலுக்குயிழு வழங்கப்படுமென இலங்கை மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

## குளவி சுட்டானில் குடியேறினர்

இராணுவத்தினரிடம் இருந்து மீட்கப்பட்ட குளவிசுட்டான் பகுதியில் மக்கள் மீளக்குடியேறி வருவதாக முல்லைத்தீவு அரச அதிபர் தெரிவித்துள்ளார்,

நெடுங்கேணி இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டபோது மக்கள் அங்கிருந்து வெளியேறியிருந்ததும் குறிப்பிடத்நக்கது.

### இனந்தெரியா...

கொல்லப்பட்டதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொல்லப்பட்ட பொலீஸாரின் உடல்கள் மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளன மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றன.

### கடற்பரப்பில்...

ணன் அல்லது வாகன் (கோணேஸ்வரலிங்கம் மணிவண்ணன்) யாழ்ப்பாணம்

★ கப்டன் கோவலன் (நடராசா இந்துகுமார்) யாழ்ப்பாணம்

★ கப்டன் தமிழ்க்கண்டி (சூசைப்பிள்ளை மேரிகொண்சலா) யாப்பாணம்

★ மேஜர் ராகினி (பாலசிங்கம் பிரபா) யாழ்ப்பாணம்

### சிவில் உடை...

லும் காயங்கள் இருப்பதைக் காண முடிந்தது.

இச் சம்பவம் பற்றி இலங்கைக் கடற்படைத் தளபதிக்கும், காங்கேசன் துறையிலுள்ள வடபகுதிக்கான கடற்படைத் தளபதிக்கும் ஈ,பி,டி,பியின் செயலாளர் நாயகமும், பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்த தொடர்பு கொண்டு தெரிவித்ததாகவும் ஈ,பி,டி,பி வட்டாரங்கள் தெரிவித்தன.

சடலத்தை நேரில் சென்று பார்வையிட்ட ஊர்காவற்றுறை பதில் நீதவான் திருமதி எஸ். இளங்கோவன் பிரேத பரிசோதனை செய்யும் பொருட்டு சடலத்தை யாழ் போதனாவைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தார்.

இதேவேளை புங்குதீவுப் பகுதி கடற்படையின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட பகுதி என்பதும் சம்பவம் இடம் பெற்ற சந்திரசேகர சர்மாவின் வீட்டிலிருந்து 500 யார் தொலைவில் கடற்படையின் முகாம் உள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கது.